## பல்கலைக்கழக நல்கைக்குழு 2018 விதிமுறைகளின்படி, பணிமேம்பாட்டிற்கு வழங்க வேண்டிய PBAS படிவங்கள்

**பொது விதிமுறைகள்:**

1. விண்ணப்பம் மற்றும் PBAS படிவத்தில் உரிய இணைப்புகள் இணைக்குமாறு (பணிமேம்பாடு காலத்திற்கு உரியவை (Assessment Period only)க்கு மட்டும்) கோரப்பட்டுள்ள இடங்களில், அவற்றிற்கான இணைப்புகளை கட்டாயம் இணைக்க வேண்டும்.
2. கல்வியாளர்கள், விண்ணப்பம் மற்றும் PBAS படிவம் ஆகியவற்றினை உரிய இணைப்புகளுடன் சேர்த்து, முதல் பக்கம் முதல் கடைசி பக்கம் வரை வரிசையாக பக்க எண் இட்டு பொருளடக்கத்தையும் (Content) தயார் செய்து அனுப்புதல் வேண்டும்.
3. மேலும், PBAS படிவத்தில் உரிய இணைப்புகள் என குறிப்பிடப்படும் இடங்களில் இணைப்புகளை இணைத்து தவறாது பக்க எண்களையும் குறிப்பிடுதல் வேண்டும்.
4. பணிமேம்பாட்டிற்கு விண்ணப்பிக்கும் கல்வியாளர்கள் பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவம் மற்றும் PBAS படிவம் 3 படிகள் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப் பெறுகிறது.